# தடைகளைத் தகர்த்து சமத்துவ சமூகம் அமைப்போம்!

## வைக்கம் விழாவில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஒரு சின்ன வருத்தம் ஏற்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், இந்தக் காட்சியைக் காண நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மிடையே இல்லையே என்ற எண்ணம்தான் அந்த வருத்தத்திற்குக் காரணம்!

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 6-ஆம் நாள், தோள்சீலைப் போராட்டத்தின் 200-ஆவது ஆண்டு விழா நாகர்கோயிலில் நடந்தது. நானும், சகாவு பினராயி விஜயன் அவர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம். “வைக்கம் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும்!” என்று நான் குறிப்பிட்டுப் பேசினேன்.

2023-ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் தேதி கேரள அரசின் சார்பில் மிகச் சிறப்பான விழாவை ஏற்பாடு செய்து, என்னையும் அழைத்திருந்தார் முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள்.

இப்போது அவர்கள், எங்களுடைய அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கிறார்.

**அனைத்து முன்னெடுப்புகளுக்கும் துணை நின்றவர், கேரள முதல்வர்!**

இந்திய அளவில் ஆளுமைமிக்க தலைவர்களில் ஒருவராக விளங்கக் கூடியவர் மாண்புமிகு பினராயி விஜயன் அவர்கள், பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் கட்டுவதற்கான அனுமதியைத் தந்தது முதல் அனைத்து முன்னெடுப்புகளுக்கும் அவர் உறுதுணையாக இருந்திருக்கிறார்.

அவருக்கும், கேரள அரசுக்கும், கேரள அமைச்சர் பெருமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் என்னுடைய அன்பையும், மரியாதையையும், நன்றியையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவை - நான் மனதாரப் பாராட்டுகிறேன்!**

வைக்கம் போராட்டம் எப்படி கம்பீரமானதோ, அதைப் போலவே இந்த நினைவகத்தையும் கம்பீரமாக, அழகியலோடு - அறிவுக் கருவூலமாக உருவாக்கியிருக்க தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அவருக்கும், இந்தத் துறையின் அதிகாரிகள், அலுவலர்கள், கட்டுமான நிபுணர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்!

இதற்கான முன்னெடுப்புகளை மிகச் சிறப்பாக எடுத்த செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகள், வாழ்த்துகள்!

**சமூக - அரசியல் போராட்ட வெற்றியின் சின்னம், இந்த நினைவகம்!**

கேரளம் இயற்கை எழில் கொஞ்சக்கூடிய தலை. இது சிறப்புக்குரிய ஒரு சுற்றுலாத் தலம். கேரளா கல்வியிலும், அரசியல் விழிப்புணர்ச்சியிலும் முன்னேறி இருக்கக்கூடிய மாநிலம். அப்படிப்பட்ட மண்ணில் சமூக அரசியல் போராட்ட வெற்றியின் சின்னமாக இந்த வைக்கம் நினைவகம் உருவாகி இருக்கிறது!

கேரளாவிற்கு வரும் அனைவரும் கட்டாயம் இந்த வைக்கம் நினைவகத்தைப் பார்த்து, ஒடுக்கப்பட்ட மக்கள், அடிமை விலங்கை உடைத்த வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்!

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டுக் கொண்டாட்ட அறிவிப்புகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றியிருக்கிறோம். அதோடு ஒரு பகுதியாக கர்நாடக மாநிலத்தின் மொழி உணர்வுக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகவும் போராடி எழுத்துலகில் சாதனை படைத்த தேவநூர மஹாதேவா அவர்களுக்கு முதலாவது “வைக்கம் விருது” வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, வைக்கம் போராட்ட நினைவகங்களையும் மிக விரைவில் வெளியிட இருக்கிறோம்.

**அய்யா பெரியார் பற்றி - பேரறிஞர் அண்ணா!**

**பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரின் சிறப்பைப் பற்றிச் சொல்லும்போது குறிப்பிட்டதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.**

**“ஒருவர் புறப்பட்டு ஓயாமல் உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாமல் பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் - எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு இங்கு இல்லாமல் வேறு எங்கேயும் இருந்ததில்லை” என்று சொன்னார்.**

**பேரறிஞர் அண்ணா சொன்னதைப் போல, இது நம்முடைய வெற்றியின் சின்னம்! இனி அடைய இருக்கக்கூடிய வெற்றிகளுக்கும் வழிகாட்டுகின்ற சின்னம்!**

1924-ஆம் ஆண்டு மார்ச் 30-ஆம் நாள் தொடங்கிய இந்த வைக்கம் போராட்டம், மகாதேவர் கோயில் தெருவில் அனைத்துச் சமூகத்தவரும் நடந்து செல்ல வழிவகுத்த போராட்டம்!

மனிதர்களை தீண்டத்தகாதவர்களாக நடத்திய சமூகக் கொடுமையை எதிர்த்து நடந்த அந்தப் போராட்டத்தில், வரிசையாக கேரளத் தலைவர்கள் அனைவரும் கைதானார்கள். இங்கிருந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அந்தக் கடிதம் கிடைத்ததும், தந்தை பெரியார் அவர்கள் ஏப்ரல் 13-ஆம் நாள் இங்கு வந்தார்.

ஏதோ ஒருநாள் வந்துவிட்டு, அடையாளப் போராட்டம் நடத்திக் கொண்டு பெரியார் திரும்பிப் போகவில்லை. கிட்டத்தட்ட ஐந்து மாத காலம் இங்கேயே தங்கி போராட்டத்தை நடத்தினார். இரண்டு முறை அவரை கைது செய்து, சிறையில் அடைத்தார்கள்.

> **பெரியார் தொடங்கிய திராவிடர் கழகத்தின் தலைவர் அய்யா ஆசிரியர் அவர்களுடைய முன்னிலையில், பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரான நான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற பொறுப்புடன் இந்த நினைவகத்தை திறந்து வைப்பது; எனக்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய வரலாற்றுப் பெருமையாக அமைந்திருக்கிறது!**
>
> **இந்த நேரத்தில், என் நெஞ்சின் அடி ஆழத்தில் ஒரு சின்ன வருத்தம் ஏற்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், இந்தக் காட்சியைக் காண நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மிடையே இல்லையே என்ற எண்ணம்தான் அந்த வருத்தத்திற்குக் காரணம்!**

**அய்யா பெரியார் பற்றி - மகாத்மா காந்தியடிகள் எழுதியது!**

அந்த சிறைவாசத்தில், அரசியல் கைதிகளுக்கான மரியாதை தரப்படாமல் கொடுமைப்படுத்தப் பட்டிருக்கிறார். இதை கேரளத் தலைவர்களில் ஒருவரான கே.பி.கேசவ மேனன் அவர்கள் “பந்தனத்தில் நின்னு” என்ற புத்தகத்தில் அதைப் பதிவு செய்திருக்கிறார்.

மகாத்மா காந்தியடிகள் அய்யா பெரியாரைப் பற்றி எழுதி இருக்கிறார்.

“திருவாங்கூர் கவர்ன்மெண்டார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும், ஈ.வி.ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்” என்று ‘யங் இந்தியா’ பத்திரிகையில் காந்தியடிகள் எழுதியிருக்கிறார்.

இப்படி, இறுதிவரைக்கும் போராடினார் தந்தை பெரியார்.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தை நடந்தபோது, காந்தியடிகளோடு இருக்கிறார் பெரியார்.

பெரியாரிடம் ஆலோசனை செய்துவிட்டுதான் திருவிதாங்கூர் ராணியை காந்தியடிகள் சந்திக்கிறார். கோயிலின் மூன்று பக்கம் முதலில் திறந்து விடப்படுகிறது. இது தொடர்பான வெற்றி விழாப் பொதுக்கூட்டத்திற்கு பெரியார் தலைமை தாங்குகிறார்.

**‘சத்தியாகிரகத்திற்கு ஏற்பட்ட மகிமை!’ அய்யா பெரியார் நெகிழ்ச்சி!**

வைக்கம் போராட்ட வெற்றி விழா 29.11.1925-ல் நடந்தபோது, அதில் கலந்துகொள்ள பெரியாருக்கும், நாகம்மையாருக்கும் அழைப்பு வந்திருந்தது. தலைமை வகிக்கச் சொன்னார்கள். தலைமை வகிக்க மறுத்து, அதற்குப் பிறகு தந்தை பெரியார் அவர்கள் வாழ்த்திப் பேசினார். “உரிமையை மறுத்த அரசாங்கமே இப்போது நம்மை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு செல்கிறது. இது தான் சத்தியாகிரகத்திற்கு ஏற்பட்ட மகிமை” என்று தந்தை பெரியார் பேசினார். “பலாத்காரப் போராட்டம் நடத்தியிருந்தால்கூட இந்த வெற்றியை இவ்வளவு சீக்கிரம் பெற்றிருக்க மாட்டோம்” என்று பேசினார் தந்தை பெரியார்.

இந்த வீரம் மிகுந்த போரில் மறக்க முடியாத இரண்டு பெண்கள், பெரியாரின் மனைவி அம்மையார் நாகம்மாளும், அவருடைய தங்கை அம்மையார் கண்ணம்மாளும்!

வைக்கம் போராட்டத்தில் வெற்றி கண்ட தந்தை பெரியாரை அனைவரும் பாராட்டினார்கள்.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், “வைக்கம் வீரர்” என்று பெரியாரைப் போற்றினார்!

மூதறிஞர் ராஜாஜி அவர்கள், “தீரரைப் போற்றுகிறது தமிழ்நாடு” என்று எழுதினார்!

**அய்யாவின் போராட்டம்! அண்ணல் அம்பேத்கர் புகழாரம்!**

இதையெல்லாம்விட புரட்சியாளர் அம்பேத்கர் எழுதியது மிக முக்கியமானது; “இந்தச் சமூக அமைப்புக்கு எதிராக, தீண்டத்தகாத மக்கள் பொதுச் சாலையைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற 1924-இல் திருவிதாங்கூர் மாநிலத்தில் எடுத்த முயற்சி மிக முக்கியமானது” என்று புரட்சியாளர் அம்பேத்கர் குறிப்பிட்டார். இதற்குப் பிறகுதான் ‘மகத்’ போராட்டத்தை தொடங்கினார் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள்.

“திரு.ராமசாமி நாயக்கர் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரர். தன் சிந்தனையிலும், செயலிலும் காந்தியத்தைக் கொண்டிருந்தாலும், சமூக மாற்றமே இந்தியாவுக்கு முதன்மையானது என்று உறுதியாக நம்புகிறவர்” என்று 1928-ஆம் ஆண்டு பாராட்டியவர் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள்.

‘வைக்கம் போராட்டம்’ என்பது, கேரளத்திற்கான போராட்டம் மட்டுமல்ல; இந்தியாவில் தொடங்கிய பல்வேறு சமூகநீதிப் போராட்டங்களுக்கான தொடக்கப் புள்ளி!

**அய்யா நடத்திய கோயில் நுழைவுப் போராட்டங்கள்!**

அமராவதி கோயில் நுழைவு, பார்வதி கோயில் நுழைவு, நாசிக்-இல் இருக்கும் காலாராம் கோயில் நுழைவு போன்றவற்றிற்கு புரட்சியாளர் அம்பேத்கர் முயற்சிகள் காரணம் என்றால், தமிழ்நாட்டில் சுசீந்திரம் கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், திருச்சி மலைக்கோட்டை கோயில், மயிலாடுதுறை கோயில், சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், ஈரோடு ஈஸ்வரன் கோயில் நுழைவுக்கு தந்தை பெரியாரும், சுயமரியாதை இயக்கமும்தான் காரணம்.

ஈரோடு ஈஸ்வரன் கோவிலுக்குள் 1929-ஆம் ஆண்டு அடியெடுத்து வைத்ததிலிருந்து, தமிழ்நாட்டின் பல கோயில்களுக்குள் சுயமரியாதை இயக்கத்துக்காரர்கள் நுழைய முடிவு செய்தார்கள். இந்த நிலையில்தான், 1939-ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டு, ‘கோயிலுக்குள் வருகிறவர்கள் அனைவரையும் அரசு பாதுகாக்கும்’ என்று உத்தரவாதம் பெறப்பட்டது.

கேரள சமூகச் சீர்திருத்தவாதிகளான டி.கே.மாதவன், கே.பி.கேசவ மேனன், கே.கேளப்பன், மன்னத்து பத்மநாபன், ஜார்ஜ் ஜோசப், டாக்டர் பல்ப்பு பத்மநாபன் போன்றவர்களும், தமிழ்நாட்டு சமூகச் சீர்திருத்தவாதிகளான தந்தை பெரியார், கோவை அய்யாமுத்து, எம்பெருமாள் நாயுடு, தங்கப்பெருமாள், நாகம்மாள், கண்ணம்மாள் போன்றோரும் ஒன்றாகச் சேர்ந்து நடத்திய போராட்டம்தான் வைக்கம் போராட்டம். தமிழ்நாட்டில் இருந்து கலந்து கொண்டவர்கள் பட்டியல் மிக நீளமானது. தமிழ்நாட்டில் இதற்காக நிதி கொடுத்தவர்கள் அதிகம்.

**ஒருங்கிணைப்பே வெற்றிக்கு வழி- என்பதற்கு எடுத்துக்காட்டான போராட்டம்!**

சமூகச் சீர்திருத்தப் போராட்டங்களில் இதுபோன்ற ஒருங்கிணைப்புகள் இருந்தால்தான் வெற்றி பெற முடியும் என்பதற்கு மாபெரும் எடுத்துக்காட்டு வைக்கம் போராட்டம்.

100 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட, இப்போது சமூகரீதியாகவும், அரசியல்வழியிலும், பொருளாதாரச் சூழலிலும் முன்னேறி இருக்கிறோம். ஆனால், இவை போதாது. இன்னும் நாம் முன்னேறிப் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது.

உயர்ந்த சாதி - தாழ்ந்த சாதி, ஏழை - பணக்காரன், ஆண் - பெண் ஆகிய பாகுபாடுகளுக்கு எதிரான நம்முடைய போராட்டத்தை நாம் தொடர வேண்டும். முன்பு இருந்ததை விட வேகமாகச் செயல்பட வேண்டும்.

**அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகும் பார்வை வேண்டும்!**

நவீன வளர்ச்சியால் இந்தப் பாகுபாடுகளை முழுமையாக நீக்க முடியவில்லை. அதற்கு மனதளவில் மக்கள் மாற வேண்டியது அவசியம். அனைத்தையும் சட்டம் போட்டு மட்டுமே தடுக்க முடியாது. சட்டம் தேவைதான், அதைவிட மனமாற்றமும் நிச்சயம் முக்கியம். யாரையும் தாழ்த்திப் பார்க்காத சமத்துவ எண்ணம் மக்களின் மனதில் வளர வேண்டும். பகுத்தறிவுச் சிந்தனைகள் வளர வேண்டும். அறிவியல்கண்ணோட்டத்தோடு எதையும் அணுகும் பார்வை வளர வேண்டும்!

தந்தை பெரியார், பாபாசாஹேப் அம்பேத்கர், ஸ்ரீ நாராயண குரு, மகாத்மா ஜோதிபா புலே, சாவித்ரி பாய் புலே, அய்யன்காளி, கார்ல் மார்க்ஸ் என்னிவருடெ ஆஷேயங்களும் சிந்தகளும் ஒரோ வ்யக்தியிலும் எத்திச்சேரணம்.

( தமிழாக்கம்: தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், ஸ்ரீ நாராயணகுரு, மகாத்மா ஜோதிபா பூலே, சாவித்ரிபாய் புலே, அய்யன்காளி, காரல் மார்க்ஸ் போன்றவர்களின் கருத்துகளும் உழைப்பும் ஒவ்வொரு மனிதனையும் சென்றடைய வேண்டும்.)

அதற்காகத்தான், ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற கொள்கையை அரசியல் கொள்கையாக மட்டுமல்ல, ஆட்சியின் கொள்கையாகவே தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ அரசில் அறிவித்திருக்கிறோம்.

‘தொட்டால் தீட்டு, பார்த்தால் தீட்டு’, தெருவில், நடந்தால் தீட்டு என்ற காலத்திலிருந்து ‘கருவறைக்குள் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்’ என்ற நிலையை நோக்கி இன்று அடைந்திருக்கிறோம்! தமிழ்நாட்டைப் போலவே கேரளத்திலும் பல புரட்சிகரமான முற்போக்குத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

**சமநிலைச் சமுதாயம் அமைப்போம்! கடமையில் முன்னேறிச் செல்வோம்!**

வைக்கம் போராட்டத்திற்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவது என்பது, அந்தப் போராளிகளை போற்றுவதற்காக மட்டுமல்ல! அவர்கள் விரும்பிய சமநிலைச் சமுதாயத்தை அமைப்பதற்கான நம்முடைய கடமையில் முன்னேறிச் செல்ல!

வைக்கம் ஒரு ஒற்றப்பெட்ட விஜயமல்லா! பின்னீடுள்ள விஜயங்களுடெயும் துடக்கம் ஆயிருன்னு அது! எல்லா மேகலைகளிலும் துடர்ச்சயாய விஜயங்கள் நேடுந்நதினு நமுக்கு உறச்சு நில்க்காம்! எந்து தடசங்கள் வந்நாலும் நம்மள் அவையெ தகர்க்கும்! நம்முடெ ஆதர்ஷங்கள் உயர்த்திப் பிடிக்குந்நதில் நம்மள் விஜயிக் - குகயும்; எந்து வில கொடுத்தும் ஒரு சமத்துவ சமூஹம் ஸ்தாபிக் - குகயும் செய்யும்!

**தடைகளை உடைப்போம்! கொண்ட கொள்கையில் வெல்வோம்!**

(தமிழாக்கம்: வைக்கம் என்பது ஒரு தனிப்பட்ட வெற்றி அல்ல; தொடர் வெற்றிகளுக்கான தொடக்கம்!

அந்த தொடர் வெற்றியை எல்லா துறையிலும் அடைய நாம் உறுதியோடு உழைப்போம்! எத்தகைய தடைகள் வந்தாலும், அவற்றை உடைப்போம்! கொண்ட கொள்கையில் வெல்வோம்! ஆதிக்கமற்ற சமத்துவ சமுதாயம் அமைத்தே தீருவோம்!)

வாழ்க பெரியாரின் புகழ்! வாழ்க பெரியாரின் புகழ்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில்

# சட்டக் கல்லூரி அமைக்கப்படுமா?

## பேரவையில் – டாக்டர் வை.முத்துராஜா கேள்வி!

சென்னை, டிச. 14 - புதுக்கோட்டையில் சட்டக் கல்லூரி அமைக்கப் படுமா? என்று பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா கேள்வி எழுப்பினார்.



இதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

**டாக்டர் வை. முத்துராஜா:** , புதுக்கோட்டை மாவட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது ஆட்சிக் காலத்தில், தனி மாவட்டமாக அறிவித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் புதுக்கோட்டையில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டுவருவதைப்போன்று, முன்னாள் முதல்வர் கலைஞருக்கு மேலும் புகழை சேர்க்கும்வகையில், புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சட்டக் கல்லூரி அமைக்க முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து, சட்டக் கல்லூரி அமைத்துத் தருவதற்கு எனது மாவட்ட சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.ரகுபதி:** புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அருகிலேயே, காரைக்குடி, திருச்சி ஆகிய இரண்டு இடங்களிலும் சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. அக்கல்லூரிகளில் போதுமான இடங்கள் இருக்கின்றன. இப்போது ‘மாவட்டத்திற்கொரு நீதிமன்றம்’ என்ற கொள்கை இருந்தாலும் கூட, ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு குறைந்த பட்சம் 105 கோடி ரூபாய் செலவாகின்ற சூழ்நிலை உள்ளது.

அவ்வளவு பெரிய தொகை செலவு செய்து சட்டக் கல்லூரி கட்டுவது, அரசின் பரிசீலனையில் இருக்கிறதே தவிர, நிச்சயமாக முதலமைச்சர் அவர்களுக்கும் ஒரு மாவட்டத்திற்கு ஒரு சட்டக் கல்லூரி உருவாக்கித் தர வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்றது. ஆனால், அதற்கு போதிய நிதி ஆதாரம் இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

வல்லம் ஒன்றியத்தில்

# கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## மாவட்டச் செயலாளர் பெ.சேகர் வழங்கினார்!

செஞ்சி, டிச. 14- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் பெய்த கனமழையால் வல்லம் ஒன்றியம் கம்மந்தூர் கிராமத்தில் கலைச்செல்வி, கௌரி, சிவகாந்தி, ஆகியோர் வீடுகள் கனமழையில் சுவர் இடிந்து விழுந்துள்ளது.செல்வி என்பவரது வீடு மழை நீரால் சூழப்பட்டது.இதேபோல் நாட்டார் மங்கலத்தில் உமா ராணி ,கவிதா, அருள்மொழி ஆகியோரது வீடுகளும் கனமழையில் இடிந்துசேதமடைந்துள்ளன.

இதுகுறித்துபாதிக்கப்பட்ட பொதுமக்கள் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அவர்களிடம்அதிகாலையில் தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் உடனடியாக காலை 6.00 மணிக்கு கம்பந்தூர் நாட்டார் மங்கலம்கிராமத்திற்கு நேரில் சென்று கனமழையால் வீடு இடிந்து விழுந்து பாதிக்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

தொடர்ந்து கனமழையால் பாதிக்கப்பட்ட அவர்களுக்கு அரிசி பெட்ஷீட், பாய் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, மாவட்ட தொழிலாளர் அமைப்பு சாரா அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அண்ணாமலை, ஒன்றிய கவுன்சிலர்கள் விஜயா கண்ணன், கலைவாணி கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் மாரியம்மாள் மாணிக்கம், துணைத் தலைவர் வனிதா சுபாகரன், நாட்டார்மங்கலம் சுப்ர மணியன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கன்னியப்பன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் பெரிய ஏரியில் இருந்து இரண்டாம் போக சாகுபடிக்கு தண்ணீரை மாவட்ட ஆட்சியர் சரயு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் ஆகியோர் தண்ணீரை திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன் , பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி, பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, வேளாண்மை துறை , பொதுப்பணித்துறை துறை அலுவலர்கள் உள்பட விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.